முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் 55 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், மீன்வளத்துறை சார்பில் 112 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் 12 கோடியே 82 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கே.என். செல்வகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒப்பிலா வீரத்தால்

வரலாற்றில் நிலைத்துவிட்ட - விடுதலை தீரர்!

ஒண்டிவீரன் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஆக. 21-

ஒப்பிலா வீரத்தால் வரலாற்றில் நிலைத்துவிட்ட விடுதலை வீரர் ஒண்டித் தேவன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.

விடுதலைத் தீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தென்மலைப் போரில் வெளிக்காட்டிய ஒப்பிலா வீரத்தால் வரலாற்றில் நிலைத்துவிட்ட விடுதலைத் தீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளில் அவருக்கு எம் புகழ் வணக்கம்!

கப்பம் கட்ட மறுத்து ஆங்கிலேயருக்கு எதிரான போர்களில் அவர் பெற்ற வெற்றிகள் நம்முள் என்றும் சுயமரி யாதைச் சுடர் அணையாமல் காக்கும்!



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து

கடலூர் மாவட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

ஆசிரியர்-மாணவர்களின் கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை! அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

கடலூர், ஆக. 21-

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுப் பயணத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் நேற்று (20.08.2024) பல்வேறு பகுதியில் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து தொடர் ஆய்வுகளை மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கொரோனா தொற்று பரவல் காலத்திலும் பள்ளி மாணாக்கர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் இல்லம் தேடி கல்வி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு பயனடைந்தனர்.

மேலும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணிகள் நடைபெற்று வருகிறது. மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் நான் முதல்வன் திட்டம், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், 8 வயதுக்கு உட்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் அடிப்படை கணிதத் திறனுடன், பிழையின்றி எழுத, படிப்பதை உறுதிசெய்யும் விதமாக எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பள்ளிக் கல்வித்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் அரசின் வாயிலாக பள்ளிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து 234ஃ77 ஆய்வுப் பயணத்தின் கீழ்; நேற்று (20.08.2024) நெய்வேலி, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, கடலூர், புவனகிரி, காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பள்ளிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுவரும் புதிய தகைசார் பள்ளிக் கட்டுமானப் பணிகளையும், மாணவர்களுக்கான புதிய விடுதி கட்டுமானப் பணிகளையும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வில் மாணவர்களுக்கு நடைபெற்ற வகுப்பினை பார்வையிட்டு அவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு செய்தார். பள்ளிகளில் ஆசிரியப் பெருமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அலுவலர்களுக்கு ஆணையிட்டார். மேலும், பள்ளி வகுப்பறைகள் மற்றும் வளாகங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அவ்வகையில் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் ஆய்வுக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க உடனடி நடவடிக்கையாக அங்குள்ள புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு தூய்மையான பள்ளி வளாகம் ஏற்படுத்தப்பட்டது.

முப்பெரும் விழாவை முன்னிட்டு

ஆவடி கிழக்கு பகுதி முழுவதும் கழக இரு வண்ணக் கொடிகளை ஏற்றி தெருமுனைக் கூட்டங்கள்!

மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு நாசர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருவள்ளூர், ஆக. 21

திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி மாநகர கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் திருமுல்லைவாயில் பகுதிச் செயலாளர் பேபி சேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் பகுதி அவைத் தலைவர் க.மு.ஜான் தலைமை தங்கினார். மாநகர பகுதிச் செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி.ராஜேந்திரன், மேயர் ஜி.உதயகுமார், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன் எஸ்.என்.ஆசிம்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மண்டல குழு தலைவர் அமுதா பேபிசேகர், பகுதி கழக நிர்வாகிகள் ப.தீனதயாளன், முத்து, சுஜாதா, வெங்கடேசன், ராஜ்குமார், எல்.சரவணன், எம்.விமல், மாலா பிரகாஷ், பைரவிஜான், ஜெயபிரியா சரவணன், கே.எஸ்.டேனியல் ஆகியோர் வரவேற்புரையற்றினார்கள்.

இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையற்றினார்.

அப்போது 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி கட்சியின் வேட்பாளர் ஆதரித்து இரவும் பகலும் பாராமல் பணியாற்றிய அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த ஆவடி கிழக்கு பகுதிகழகநிர்வாகிகளுக்கு அனைவருக்கும் நன்றி கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா வழியில் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த தி.மு.க.வின் பவள விழா ஆண்டு நிறைவினை, கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் ஆவடி கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் அனைவரும் பெருதிரளாக கலந்து கொள்ள வேண்டும்.

(75 ஆண்டு) கால அரசியல் வரலாற்றில் தி.மு.கழகம் படைத்த சாதனைகள் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மகத்தான திட்டங்கள் திராவிட மாடல் அரசைத் திறம்பட நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள்நலத் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கிச் சுவர் விளம்பரங்கள் எழுதப்பட வேண்டும்.

ஆவடி கிழக்கு பகுதி உட்பட்ட வார்டுகளில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, மக்களிடம் தி.மு.க.வின் சாதனைகளை எடுத்துக் கூற வேண்டும்.

ஆவடி கிழக்கு பகுதியில் உள்ள கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்ற வேண்டும். அனைத்து பூத் கமிட்டிகளையும் (BLA2. BLC) உடனடியாக செம்மைப்படுத்த வேண்டும்.

ஆவடி கிழக்கு பகுதியில் உள்ள வார்டுகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை எடுத்துக் கூறி இல்லம் தோறும் இளைஞர் அணி சார்பில் உறுப்பினர் சேர்க்கை நடத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி, எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ஜி.விமல் வர்ஷன், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ப.ச.கமலேஷ், தி. வே.முனுசாமி, ஜி.ஆர்.திருமலை, கே.சுரேஷ்குமார், நாகூர்கனி, பெ.வினோத், பிரவீன்குமார், துர்கா பிரசாத், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்

குரங்கு காய்ச்சலைப் பற்றிய ஆய்வுக் கூட்டம்!

அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.21-

உலக சுகாதார நிறுவனம், குரங்கு காய்ச்சல் நோயை சர்வதேச அக்கறையின் பொது சுகாதார அவசரநிலையாக (PHEIC) அறிவித்ததைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் சுகாதார வசதிகளின் தயார்நிலையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஆய்வு செய்ப்பட்டது.

அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, கண்காணிப்பின் நிலை, தனிமைப்படுத்தப்பட வேண்டிய தன் அவசியம் மற்றும் நோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான நிலையான செயல்பாட்டு நெறிமுறை குறித்து விவாதித்தார். ஒன்றிய அரசு குரங்கு காய்ச்சலை பரிசோதிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட / அனுமதிக்கப்பட்ட மையமாக சென்னையில் உள்ள கிங் இன்ஸ்டிட்யூட்டை ஒன்றிய அரசால் இனம் காணப்பட்டுள்ளது. இருப்பினும், குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிகழ்வேதும் இது வரை மாநிலத்தில் பதிவாகவில்லை.

மேலும், கண்காணிப்பு நெறிமுறையை மேம்படுத்தவும், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்களுக்கான பயிற்சித் திட்டத்தை நடத்தவும் மருத்துவத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நோய் பரவல் குறித்து கண்காணிப்பை தீவிரப்படுத்தவும், நிலமையை தொடர்ந்து கண்காணிக்கவும் மருத்துவத் துறை முடிவு செய்துள்ளது. தமிழக மருத்துவத் துறையும், தேசிய நோய் கட்டுப்பாட்டு மையத்தின் மூலம் ஒன்றிய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சகத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி இந்நோய் குறித்து தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இக்கூட்டத்தில் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், குழும இயக்குநர், தேசிய சுகாதார நலக்குழுமம், எம்.அரவிந்த், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவபணிகள் கழகம், டாக்டர். ஏ. அருண் தம்புராஜ், திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார திட்டம், திருமதி. ஆர்.சீதா லட்சுமி, திட்ட இயக்குநர், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், திருமதி. எம்.விஜய லட்சுமி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர், திருமதி. வி.கலையரசி, சிறப்பு செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, டாக்டர் டி.எஸ்.செல்வவிநாயகம் இயக்குநர். பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, டாக்டர் ஜெ.சங்குமணி, இயக்குநர், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி, டாக்டர் ஜெ.ராஜமூர்த்தி, இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் பிற உயர் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திரிசூலம் ஊராட்சியில் கடந்த சுதந்திர தினத்தன்று நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ.யிடம் பொது மக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை ஏற்று சம்பந்தப்பட்ட பகுதிகளில் பழுதான சாலைகளை ஆய்வு மேற்கொண்டு புதிய சாலைகள் அமைச்சர் தரவேண்டும் எனவும், அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உணவுகள் குறித்து உணவு கூடத்திற்க்கு சென்று ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளுக்கு தரமான உணவுகள் வழங்க வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து காரிய மண்டபம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 10 லட்சம் ரூபாய் ஒதுக்கிடு செய்த இடத்தை நேரில் ஆய்வு செய்து, அனைத்து பணிகளும் விரைவில் நிறைவேற்றி தரப்படும் என பொதுமக்களுக்கு உறுதி அளித்தார். இந்த ஆய்வின்போது ஊராட்சி மன்ற தலைவர் உஷா மாரிமுத்து, ஊராட்சி அதிகாரிகள் மற்றும் கவுன்சிலர்கள் உடன் இருந்தனர்.

'69 சதவிகித இடஒதுக்கீடு 9வது அட்டவணையும் - ஒரு பார்வை' எனும் தலைப்பில்

சென்னை - பெரியார் திடலில் சொற்பொழிவு!

தக்கோலம் தேவபாலன் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, ஆக.21-

69 சதவிகித இட ஒதுக்கீடு 9வது அட்டவணையும் - ஒரு பார்வை எனும் தலைப்பில் பெரியார் திடலில் தலைமைக் கழக சொற்பொழிவாளர் தக்கோலம் தேவபாலன் உரையாற்றுகிறார்.

நாளை (22.08.2024 - வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னையில் உள்ள பெரியார் திடலில் பெரியார் நூலக வாசகர் வட்ட தலைவர் வழக்கறிஞர் ஆ.வீரமர்த்தினி தலைமையுரை ஆற்றுகிறார்.

வழக்கறிஞர் தென்மாறன், பா.மணியம்மை, ஜெ.ஜனார்த்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தி.மு.க தலைமை சொற்பொழிவாளர் தக்கோலம் தேவபாலன் '69 சதவிகித இடஒதுக்கிடு 3வது அட்டவணையும் ஒரு பார்வை' என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

பெரியார் நூலக வாசகர் வட்ட செயலாளர் ஆ. வெங்கடேசன் நன்றியுரை ஆற்றுகிறார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர கிழக்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் திருமுல்லைவாயில் பகுதிச் செயலாளர் பேபி சேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், சன்.பிரகாஷ், மேயர் உதயகுமார், ம.ராஜி, எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ஜி.ராஜேந்திரன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன் ப.ச.கமலேஷ், தி.வே.முனுசாமி, ஜி.ஆர்.திருமலை, அமுதா பேபிசேகர், க.மு.ஜான், ப.தீனதயாளன், முத்து, சுஜாதா, வெங்கடேசன், ராஜ்குமார், எல்.சரவணன், எம்.விமல், மாலா பிரகாஷ், பைரவிஜான், ஜெயபிரியா சரவணன், கே.எஸ்.டேனியல், பி.ஜி.பாண்டியன், கே.சுரேஷ்குமார், நாகூர்கனி, பெ.வினோத், பிரவீன்குமார், துர்கா பிரசாத், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்